### எபேசியர் 4:32

ஆனால் ஒருவருக்கொருவர் தயவாயும், இரக்கமாயுமிருந்து, கிறிஸ்துநாதரில் சர்வேசுரன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னித்துக்கொள்ளுங்கள். (கொலோ. 3:12, 13; மத். 6:14.)

### கலாத்தியர் 6:10

ஆனதால் நமக்குக் காலமிருக்கும்போதே, எல்லாருக்கும், விசேஷமாய் விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்வோமாக.

### உரோமாபுரியார் 1 12:9

உங்கள் சிகேம் பாசாங்கற்றிருப் பதாக; தின்மையை வெறுத்து, நன்மை யைக் கைப்பற்றிக்கொள்ளுங்கள். (யாத். 20:14; உபாக. 5.18.)

### உரோமாபுரியார் 1 12:21

தின்மையானது உன்னை ஷெஜயிக்க விடாதே. ஆனால் நீயே தின்மையை நன்மையால் ஷெஜயிப்பாயாக.

### கொரிந்தியர் 1 10:23

எல்லாவற்றிற்கும் எனக்கு உத்தரவுண்டு. ஆனால் எல்லாம் நல்விர்த்தியை உண்டாக்காது. ( 1 கொரி. 6:12.)

### சங்கீதங்கள் 145:17

### நாகும் ஆகமம் 1:7

ஆண்டவர் நல்லவர், துன்ப காலத்தில் திடனளிக்கிறவர்; தம்மை நம்பினோரை அறிந்து (காக்கின் றவர்) (2திமோ. 1:7).

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:15-16

தீபத்தைக் கொளுத்தி மரக்காலின்கீழ் வைக்காமல் வீட்டிலுள்ள யாவருக்கும் பிரகாசிக்கும்படி அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள். (மாற். 4:21; லூக். 8:16.) அவ்வண்ணமே மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் பொருட்டு, உங்கள் ஒளி அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (1 இராய. 2:12.)

சங்கீதங்கள் 37:3

ஏனெனில், நீர் விட்ட அம்புகள் என்னை உருவிப் பாய்ந்தன, உமது கையின் பாரம் என்மேற் சுமந்தது.

கலாத்தியர் 5:22-23

இஸ்பிரீத்துவின் கனிகள் ஏதென் றால்: பரம அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயாளம், நன்மைத்தனம், சகிப்பு, சாந்தம், விசுவாசம், அடக்க வொடுக்கம், இச்சையடக்கம், நிறைகற்பு இவைகளாம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணமில்லை.

பழமொழியாகமம் 19:22

எளிய மனிதன் இரக்கமுள்ள வனாம்; பொய்கார மனிதனைவிடத் தரித்திரன் உத்தமனாம்.

இராயப்பர் பொது நிருபம் 2 1:5-7

அப்படியிருக்க, நீங்களும் உங்களாலான முயற்சியெல்லாஞ் செய்து உங்கள் விசுவாசத்தோடு புண்ணியத்தையும், (கலாத். 5:22.) புண்ணியத்தோடு விவேகத்தையும், விவேகத்தோடு இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடு பொறு மையையும், பொறுமையோடு பக்தி யையும், பக்தியோடு சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடு தேவ சிநேகத்தையும் சேர்த்து அநுசரியுங்கள்.

எபேசியர் 4:29

கெட்ட பேச்சு ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். விசுவாசத்தின் நல்விருத்திக் கேதுவான பேச்சு உண்டானால், கேட்கிறவர்களுக்குப் பக்தியை வருவிக்கும்படி அதைப் பேசுங்கள்.

எரேமியாஸ் ஆகமம் 6:16

இன்னுங் கர்த்தர் பின்வரு மாறு சொல்லுகிறதாவது: வழியில் நின்று பார்த்துக்கொண்டு: உங்கள் பழைய

நடபடிகளென்ன, எது நல்ல வழி என்று விசாரித்து அதில் நட வுங்கள்; அப்போது உங்கள் மனங் குளிருமாம்; அதற்கு அவர்களோ அவ்வழியே செல்லமாட்டோம் என்றார்கள் (மத்.11:20).

சங்கீதங்கள் 25:6-7

கபடமற்றவர்களின் நடுவில் என் கரங்களைக் கழுவி, உமது பீடத் தைச் சுற்றிவந்து; (அவ்விடம்) உமது துதிகளின் சப்தத்தைக் கேட்டு, உமது அதிசயங் களனைத்தையும் வெளிப்படுத்து வேன்.

சங்கீதங்கள் 34:14

நான் (ஒவ்வொருவனை) என் உறவினனைப் போலவும், சகோதர னைப் போலவும் பாவித்து நடந்து (அவர்களுக்காகத்) துக்கித்துப் பிரலாபித்து இப்படியே கஸ்திப் பட்டுக்கொண்டிருந்தேன்.

கொரிந்தியர் 2 9:8

மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் உங்களுக்குப் போதுமான யாவற்றையுங் கொண்டிருந்து, எவ்வித நற்கிரியைகளிலும் சம்பூரணமுள்ளவர்களாகும்படி சர்வேசுரன் உங்களிடத்தில் எவ்வித நன்மைகளையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:36

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

தீமோத்தேயு 1 2:9-10

அப்படியே ஸ்திரீகளும் யோக்கியமான ஆடையணிந்து, நாணத்தையும் இச்சையடக்கத்தையும் ஆபரணமாகப் பூண்டு, சடை பின்னாமலும், பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரங்களினாலாவது தங்களை அலங்கரியாமலும், ( 1 இரா. 3:3.) தேவ பக்தியை முன்னிட்டு நடக்கிற பெண்பிள்ளைகளுக்கு யோக்கியமான விதமாய் நற்கிரியைகளால் தங்களை அலங்கரிக்கக்கடவார்கள்.

இராயப்பர் பொது நிருபம் 1 3:13

நீங்கள் நன்மையை நாடிச்சென்றால், உங்களுக்குத் தீங்குசெய்பவன் யார்?

தீத்துவுக்கு எழுதிய நிருபம் 2:14

இவரே நம்மைச் சகல அக்கிரமங்களிலும் நின்று இரட்சித்து, நம்மைச் சுத்தமாக்கி, தமக்கு உகந்தவர்களும், நற்கிரியைகளில் வைராக்கி யருமான ஷஜனமாக்கிக்கொள்ளும் படி தம்மைத்தாமே நமக்காகக் கை யளித்தார்.

## பழமொழியாகமம் 2:9

நீ அப்போதுமல்லோ நீதி யையும், நியாயத்தையும், நேர்மை யையும், நன்னெறியனைத்தையுங் கண்டுபிடிப்பாய்.